# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி.

சக்கராம்பாளையம், எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வ), நாமக்கல் - 637 202
செல்: 99655-31727, 99655-35967

## பொதுத் தேர்வு மார்ச் -2019

## TENTATIVE ANSWER KEY

## பத்தாம் வகுப்பு - தமிழ் முதல் தாள்

பிரிவு – I மதிப்பெண்கள் : 20

| | | |
|---|---|---|
| | பகுதி – 1 | 6x1=6 |
| **I. உரிய விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக** | | |
| 1 | இ) மாணிக்கம் | 1 |
| 2 | ஆ) கம்பராமாயணம் மற்றும் திருக்குறள் | 1 |
| 3 | அ) எருமை | 1 |
| 4 | அ) பெரியார் | 1 |
| 5 | அ) தொடுத்தல் | 1 |
| 6 | ஆ) இராமலிங்கர் | 1 |

| | | |
|---|---|---|
| | பகுதி – 2 | 6x1=6 |
| **II கோடிட்ட இடத்தை நிரப்புக** | | |
| 7 | திருவள்ளுவர் | 1 |
| 8 | நெற்கதிர் | 1 |
| 9 | துள்ளல் | 1 |
| 10 | அம்பேத்கர் | 1 |
| 11 | எடிசன் | 1 |
| 12 | உடற்கூறு | 1 |

| | | |
|---|---|---|
| | பகுதி – 3 | 4x1=4 |
| **III பொருத்துக** | | |
| 13 | சீத்தையர் - கீழானவர் | 1 |
| 14 | தெறு - பகை | 1 |
| 15 | தார் - மாலை | 1 |
| 16 | செத்தை - குப்பைக்கூளம் | 1 |

ஸ்ரீ வித்யபாரதி Copyright @ Padasalai.Net

| பகுதி – 4 | | 4x1=4 |
|---|---|---|
| IV விடைக்கேற்ற வினா அமைக்க(வினா சரியாக அமைந்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | | |
| 17 | சங்க இலக்கியங்கள் எவற்றையெல்லாம் கடந்தவை? | 1 |
| 18 | படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்? | 1 |
| 19 | பலகோடிமக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரமாய்க் காந்தியடிகள் எதைக் கருதினார்? | 1 |
| 20 | தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கு அரசுப்பணியில் எத்தனை விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? | 1 |

**பிரிவு – II** **மதிப்பெண்கள் : 20**

| பகுதி – 1 | | 5x2=10 |
|---|---|---|
| V எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் | | |
| 21 | • ஊக்கமுடையவன் பகையை வெல்ல காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பான். | 1 |
| | • அஃது ஆட்டுக்கிடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது. | 1 |
| 22 | • பிறருக்குப் பணிந்து ஒழுகுதல்<br>• நல்வழியில் நடத்தல்<br>• சான்றோர் அறிவுரைகளைக் கேட்டல் | 1 |
| | • நுண்ணறிவு நூல்களை ஆராய்தல்<br>• அந்நூல்கள் நவிலும் வண்ணம் வாழ்தல் ஆகியன பழியில்லா மன்னனின் பண்புகளாகும் | 1 |
| 23 | • துடி என்னும் பறையை உடையவன் குகன்<br>• வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்<br>• தோல்செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன் | 1 |
| | • இருள் போன்ற கரிய நிறத்தை உடையவன்<br>• கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தது போன்ற பெரும்படை பலம் உடையவன். | 1 |
| 24 | ♦ ஆதிநான்மறை நூல் கற்ற வாய்மை தவறாதவர் அப்பூதியடிகள் | 1 |
| | ♦ இப்போது இங்கு அவன் உதவான் என அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறினார். | 1 |
| 25 | • செய்யுள் விதைகள் - நான்கு நன்னெறி<br>1. வைதருப்பம் - ஆசுகவி<br>2. கௌடம் - மதுரகவி<br>3. பாஞ்சாலம் - சித்தரகவி<br>4. மாகதம் - வித்தாரக்கவி | 1 |
| | • செய்யுள் விளைபொருள் - நாற்பொருள்<br>1. அறம், 2. பொருள் 3. இன்பம் 4. வீடு. | 1 |

| | | |
|---|---|---|
| 26 | ♦ பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும் குழந்தை, அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை. | 2 |
| 27 | • தாமரை மலர்போன்ற நந்திவர்மனின் திருவடிகளைப் பணிந்து திறை செலுத்தும் மன்னர் இப்பூவுலகை ஆள்வார்<br>• அவனைப் பணிந்து வணங்காத அறிவற்ற மன்னர் போரில் அவனால் உயிரை இழந்து தேவர் உலகை ஆள்வார். அத்தகைய வீரம் மிக்கவன் நந்திவர்மன். | 1<br>1 |
| | **பகுதி - 2** | |
| **VI எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | | **5x2=10** |
| 28 | • தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழிநூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன.<br>• இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப்பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்பார் முனைவர் எமினோ. | 1<br>1 |
| 29 | ♦ ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும்.<br>♦ எடுத்துக்காட்டாக, உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம் விளக்கப்படம் எனப்படும். | 1<br>1 |
| 30 | ♦ கிரேக்கம்<br>♦ உரோமபுரி<br>♦ எகிப்து<br>♦ சாவகம் | ½<br>½<br>½<br>½ |
| 31 | • தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த என்னும் தொடர் இடம் பெற்றுள்ள தொடர் பதிற்றுப்பத்து.<br>• இதன் மூலம் கரும்பைப் பிழிவதற்கும் அக்காலத்தே எந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தது என்ற பழந்தமிழரின் பொறியியல் அறிவு அறியலாகின்றது. | 1<br>1 |
| 32 | ♦ இந்தியாவின் வாழ்வு இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு<br>♦ அக்கிராமங்களின் வாழ்வு அங்கு வாழும் உழவர்கள், இளைஞர்கள் கையில் தான் உள்ளது. | 1<br>1 |
| 33 | ♦ இராமலிங்கனார் உருவ வழிபாட்டை நீக்கி ஒளி வழிபாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார்.<br>♦ அதற்காக வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார்.<br>♦ மக்கள் அறியாமையை நீக்கி அறிவு ஒளிபெற அங்கு சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.<br>♦ இதனால் பாரதியார் இவரைப் புதுநெறிகண்ட புலவர் என்று போற்றினார். | ½<br>½<br>½<br>½ |
| 34 | ♦ மருத்துவம்,<br>♦ பொறியியல்,<br>♦ வேளாண்மை,<br>♦ சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். | ½<br>½<br>½<br>½ |

பிரிவு – III மதிப்பெண்கள் : 24

| பகுதி – 1 | | |
|---|---|---|
| **VII எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** | | **3x4=12** |
| 35 | **வாயிற்காவலன் கண்ணகி குறித்துக் கூறியவை:**<br>♦ வெற்றி தரும் வேலினை உடைய பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலைப் பீடத்தில் ஏறிய இளங்கொடியாகிய கொற்றவையும் அல்லள்.<br>♦ கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்.<br>♦ இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்.<br>♦ அச்சம் தரும் காட்டினை இருப்பிடமாகக் கொண்ட காளியும் அல்லள்<br>♦ தாருகன் என்ற அசுரனின் பரந்த மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்.<br>♦ தன்உள்ளத்தில் கறுவு கொண்டாள் போலவும் மிகவும் சினம் கொண்டாள் போலவும் விளங்குகின்றாள் என வாயிற்காவலன் கண்ணகி குறித்துக் கூறினான். | 1<br>1<br>1<br>1 |
| 36 | **“இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ” :**<br>• **“இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ” – என்ற தொடரைக் கூறியவன் இராமன்.**<br>♦ குகன் தான் கொண்டுவந்த தேனையும் மீனையும் ஏற்குமாறு வேண்டினான்.<br>♦ அப்போது, இராமபிரான் தன் அருகிலிருந்த முனிவர்களை நோக்கிப் புன்முறுவல் செய்தார்.<br>♦ உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டுவந்த பொருள்கள் கிடைத்தற்கரியன.<br>♦ இவை எளியனவாயினும் தேவாமுதத்தைக் காட்டிலும் சிறந்தனவாம்.<br>♦ இவை தாழ்ந்தன வாயினும் அன்பு கலந்தனவாதலால் தூயனவே.<br>♦ ஆகையால் இனிமையான இவை எம் போன்றவர் ஏற்றுக்கொள்ளுதற்கு உரியனவே. நாம் ஏற்றுக்கொண்டதே உண்டதற்குச் சமமாகும்” என்று அன்புடன் கூறினான். | 1<br>½<br>½<br>½<br>½<br>½<br>½ |
| 37 | **கண்ணகனாரின் புறநானூற்றுப் பாடல் வழி அறியலாகும் செய்தி:**<br>♦ பொன்னும் பவளமும் முத்தும் மாணிக்கமும் தோன்றும் இடங்களால் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பவை ஆகும்.<br>♦ அவற்றை மாலையாகக் கோத்து அணிகலன்களாக அமையும் போது தம்முள் ஒருங்கு சேர்ந்து அழகு சேர்க்கும்.<br>♦ அதுபோல சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர்<br>♦ சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.<br>♦ அதற்குச் சான்று கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு. | 1<br>1<br>1<br>½<br>½ |

| | | |
|---|---|---|
| 38 | **புலியின் கொடுஞ்செயல்கள் :**<br>♦ சிங்கக் கூட்டங்களின்றிப் பிற விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.<br>♦ பெரிய பனைபோன்ற தும்பிக்கையினையும் மும்மதங்களையும் உடைய யானையின் கொம்புகளைப் பிடித்து இழுத்து, மார்பைக் கீறக் குருதியினைக் குடிக்கும்.<br>♦ உறங்காது மலைகளும் அதிருமாறு இடியைக் காட்டிலும் மிகுதியாய் முழங்கும்<br>♦ அவ்வோசையைக் கேட்ட காட்டெருமைகளும் பன்றிகளும் கரடிகளும் கலைமான்களும் கால்கள் தடுமாற்றமுற்று விழுந்து உடல் நடுக்கமடையும் | ½<br>1<br>½<br>2 |
| 39 | ♦ இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால் ஓர் இரவுக்குள் என்னென்ன நேருமோ?<br>♦ பணியை முடித்து ஓய்வு பெற வேண்டும். அதனால் இனிக்கும் செய்திகள் மனதில் வந்து குவியும்.<br>♦ செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.<br>♦ செடியின் வெற்றி பூவில் உள்ளத்தைப் போல், நமது வெற்றிகளால் துன்பங்கள் ஓடிவிடும். | 1<br>1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | **பகுதி – 2** | |
| **VIII எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** | | **3x4=12** |
| 40 | பெண்ணுரிமை குறித்துப் பெரியார் கூறுவன:<br>♦ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்<br>♦ அதற்கு பெண்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தார் பெரியார்.<br>♦ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாய் இராமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் பெண்மணிகளாக விளங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.<br>♦ பெண்களுக்கு படிப்புரிமை, சொத்துரிமை, சுயசிந்தனை உரிமை ஆகியவற்றை வழங்க வேண்டும் என்றார். | 1<br>1<br>1<br>1 |
| 41 | **கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய அரும்பணி:**<br>♦ அறியாமை தான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை அம்பேத்கர் நன்குணர்ந்தார். எனவே ஒவ்வொருவரும் முழுமனித நிலையை அடைய கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது.<br>♦ செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம், உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம் என்றார். கற்பித்தல் அறிவியல் முறைக்கு உகந்ததாக இருக்கவேண்டும். கல்வி மாணவர்களது ஊக்கத்தைத் தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக்கொணர்வதாகவும் அமைய வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.<br>♦ அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| | ♦ மும்பையில் இவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப்பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. | 1 |
| 42 | **பேச்சின் முதற்கூறு – தொடக்கம் (அ) எடுத்தல்**<br>• பேச்சினைத் தொடங்குவது எடுத்தல். தொடக்கம் நன்றாய் இராவிட்டால் கேடம்டபவர்களுக்குப் பேச்சினைக் குறித்து நல்லெண்ணம் தோன்றாது.<br>• தட்டுத்தடங்களின்றிப் பேசுவதற்குத் தொடக்கமே அடித்தளமாகும்.<br>• மண்ணில் ஈரப்பதம் இருந்தால் தான் விதைக்க முடியும் என்பது போல கேட்போரைத் தன்வயப்படுத்தும் வகையில் தொடங்க வேண்டும்.<br>• சுருக்கமான முன்னரையுடன் தொடங்கி ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுதல் வேண்டும். இடத்திற்கும் சூழுலுக்கம் ஏற்ப தொடக்கம் அமைதல் வேண்டும். | 1<br>1<br>1<br>1 |
| 43 | **மருதநிலத்தில் நடைபெற்ற தொழில் உழவுத்தொழில்:**<br>♦ பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் என்பது திருக்குறள்.<br>♦ தமிழர் உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலை பெரிதும் போற்றினர்.<br>♦ உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது.<br>♦ உழவுக்குச் சிறப்புபெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாய் வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருதநிலத்தின் பெருமை கருதி வேந்தனை முதன்மைப்படுத்தினார் தமிழர். | 1<br>1<br>1<br>1 |
| 44 | **மனித நேயம் குறித்துக் காந்தியகள் கூறுவன:**<br>♦ மனிதரோடு மனிதராக வாழ்ந்து மகாத்மாவாக உயரமுடியும் என்பதை மெய்ப்பித்தவர் காந்தியடிகள் .என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும், மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன், அதற்குக் காரணம் நான் மனிதனாக இருப்பதும் அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான் என்றார்.<br>♦ மனிதன் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதைக் காட்டிலும் மனிதத் தன்மையால் உணர்த்தப் பெறுவதே சிறப்பு<br>♦ நான் குஜராத்தியனாக, இந்தியனாக இருப்பதைக் காட்டிலும், மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது என எண்ணினார்.<br>♦ இவ்வாறு "உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும்" என்றார் காந்தியடிகள். | 2<br>1<br>½<br>½ |

## பிரிவு – IV மதிப்பெண்கள் : 10

| | | |
|---|---|---|
| **IX கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | | **5x1=5** |
| 45 | i) வினைத்தொகை<br>ii) பதிதொரு<br>கதிர்தொகு<br>நிதிதரு<br>மதியிலி } தி - எதுகை<br>iii) நந்திக்கலம்பகம்<br>iv) நந்திவர்மனைப் பணிந்து வணங்காத அறிவற்ற மன்னர் போரில் அவனால் உயிரை இழந்து தேவர் உலகை ஆள்வார்.<br>v) மேகம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 46 | **கீழுக்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | **5x1=5** |
| | i) முந்நீர் - மூன்று + நீர்<br>1. ஆற்றுநீர்<br>2. ஊற்றுநீர்<br>3. மழைநீர்<br>ii) மகடூஉ – பெண்கள்<br>iii) இன்று பெண்கள் ஆண்களுக்கு இணையாக அனைத்துத் துறைகளிலும் பணியாற்றுகின்றனர்.<br>iv) வினையின் மூலம் பொருளீட்டுவதையே ஆடவர்கள் உயிராகக் கருதினர்.<br>v) சங்க காலத்தில் பொருளீட்டியவர்கள் ஆண்களே ஆவர். | 1<br>1<br>1<br>1<br>1 |

## பிரிவு – V மதிப்பெண்கள் : 26

| | | |
|---|---|---|
| | **பகுதி - 1** | |
| **X எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்** | | **2x8=16** |
| 47 (அ) | **ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்து:**<br>❖ ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தரவல்லது ஒழுக்கம்<br>❖ எவ்வகையில் பார்த்தாலும் ஒழுக்கமே நல்லதுணை. எனவே எப்பாடுபட்டாவது அதனைக் காக்கவேண்டும்<br>❖ ஒழுக்கமுடையவரே உயர் குடியினர். ஒழுக்கமில்லாதவர் இழிகுடியினர்<br>❖ கற்ற கல்வியை மறந்தால் மீண்டும் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கம் குறைந்தால் குடிப்பிறப்பின் சிறப்பு அழியும்.<br>❖ பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது. | 8 |

| | | |
|---|---|---|
| | ❖ ஒழுக்கம் தவறுவதால் வரும் குற்றங்களை உணர்ந்தோர், அவ்வொழுக்க நெறியில் இருந்து விலகார்.<br>❖ ஒழுக்கமுடையோர் மேன்மையடைவர். ஒழுக்கமில்லாதவர் பெரும்பழியை அடைவர்.<br>❖ நல்லொழுக்கம் நன்மை என்னும் விளைவைத் தரும் விதையாகும். தீயொழுக்கம் துன்பத்தையே விளைவாகத் தரும்<br>❖ நல்லொழுக்கமுடையோர் தவறியும் தம் வாயால் தீய சொற்களைப் பேசவியலாது.<br>❖ உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர், எவ்வளவு கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே | |
| 47 (ஆ) | **கலித்தொகை கூறும் வாழ்க்கை நெறிமுறைகள்:**<br>♦ இல்வாழ்வென்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல்<br>♦ பாதுகாப்பதென்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்<br>♦ பண்பெனப்படுவது சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்<br>♦ அன்பெனப்படுவது சுற்றம் தழுவி வாழ்தல்<br>♦ அறிவெனப்படுவது அறிவிலார் சொல்பொறுத்தல்<br>♦ நெருக்கம் எனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்<br>♦ நிறைவு எனப்படுவது பிறர் அறியாது மறைபொருள் காத்தல்<br>♦ நீதிமுறைமை எனப்படுவது ஒருபால் கோடாது ஒறுத்தல்<br>♦ பொறுமை எனப்படுவது இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் | 8 |
| 48 (அ) | **பெண்கள் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகள்:**<br>♣ **பெண்கல்வி:**<br>பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டும் அன்று: சமூக மாற்றத்தின் தேவை என்பதை உணர வேண்டும். ஆண்கள், பெண்களைப் படிக்க வைத்து, அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் அளிக்க வேண்டும்.<br>பெண்களை மனிதர்களாக மாற்ற முதலில் அடுப்பங்கரையை விட்டு வெளியேற்றிக் கல்வி பெற வைக்க வேண்டும். அப்போது தான் சமூக மாற்றம் ஏற்படும். நாட்டிலுள்ள பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமையே யாகும். | 2 |

| | | |
|---|---|---|
| | ♣ **பெண்ணுரிமை:**<br>பெண்கள் உரிமை பெற்று புது உலகைப் படைக்க வேண்டும் அதற்கு பெண்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தார் பெரியார். பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாய் இராமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் பெண்மணிகளாக விளங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.<br>பெண்களுக்கு படிப்புரிமை, சொத்துரிமை, சுயசிந்தனை உரிமை ஆகியவற்றை வழங்க வேண்டும் என்றார்.<br>♣ **சொத்துரிமை**<br>பெண்களுக்கு சொத்துரிமை இல்லாததே, பெண் அடிமைக்கு முதல் காரணமாகும்.<br>பெண்கள் மரபுவழி வரும் சொத்துரிமைப் பெற போராடவும், கிளர்ச்சி செய்யவும் முன்வர வேண்டும்.<br>பாசவலைக்குக் கட்டுப்படாமல் பெண்கள் தெளிந்த மனதோடு உரிமையைக் கேட்டு பெறுதல்வேண்டும்.<br>பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், எல்லா வகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும்.<br>♣ **அரசுப்பணி**<br>அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெறுதல்வேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். | 2<br>2<br>2 |
| (ஆ) | **அறவழி விடுதலைப் போர் குறித்த செய்திகள்:**<br>**போராட்ட முறைகள்:**<br>♣ போராட்ட முறைகள் இரண்டு வகைப்படும் ஒன்று, போர்முறையில் உரிமையை நிலைநாட்டுவது, மற்றொன்று, அறவழியில் உரிமைப்போர் செய்து வெற்றி பெறுவது. இவற்றுள் அறப்போர் முறையினைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார்.<br>**அறப்போர் முறை**<br>♣ "வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயைத் தீயால் அணைக்க முற்படுவது போன்றது" என்று கூறினார். நெருப்பை நீரால்தான் அணைக்க முடியும் என்றார். வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில்தான் தடுக்க முடியும். அறவழியைப் பின்பற்றிப் பெறுகிற விடுதலையே நிலைக்கும் என்றார் காந்தியடிகள். | 2<br>2 |

| | | |
|---|---|---|
| | **அறவழி இயக்கங்கள்:**<br>♣ இந்தியா பிற நாடுகளுக்கு வழிகாட்டியாக திகழ வேண்டும் என்றார். அறவழியை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டியது இந்தியரின் கடமை என்றார். காந்தியடிகளின் அறவழிப் போராட்டங்களுக்கு மக்களின் ஆதரவு பெருகிறது. இதனால் கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய இயக்கங்கள் பரவின.<br>**உலகுக்கு வழிகாட்டியாக இந்தியா திகழும்:**<br>♣ அறவழிப்போரில் இறப்போரின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்றும், இம்முறையில் இந்தியா ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும் என்று விரும்பினார். | 2<br><br>2 |
| | **பகுதி – 2** | **2+2+6=10** |
| 49 | **செய்யுள் வடிவில் விடை தருக.**<br>**திருக்குறள் (பெரியாரைத் துணைகோடல்)**<br>அ) அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்<br>பேணித் தமராக் கொளல்.<br>**திருக்குறள் (ஒழுக்கமுடைமை)**<br>ஆ) உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்<br>கல்லார் அறிவலா தார்.<br>- **திருவள்ளுவர்**<br><br>**தமிழ் வளர்ச்சி**<br>இ) உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்<br>ஒருத்தர்தயை இல்லாமல் ஊறறியும் தமிழில்<br>சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்<br>தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்<br>இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்<br>எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்<br>தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோ மில்லை<br>தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.<br>- **பாவேந்தர் பாரதிதாசன்** | <br><br>2<br><br>2<br><br><br><br><br><br>6 |

தமிழ்த்துறை
ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 94432-31727
73731-25239, 97906-91433